# வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறைகளிலிருந்து உங்கள் குடும்பத்தினரையும், நண்பர்களையும் பாதுகாத்துக் கொள்ளவும்

வீட்டு வன்முறை குடும்ப வன்முறை

வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறை நியூ சவுத் வேல்ஸ் முழுக்க வேறுபாடின்றி ஒவ்வொரு புறநகர்ப் பகுதியிலும் உள்ளது. அது வெவ்வேறு பாலினத்தைச் சார்ந்த, எல்லா வயது மற்றும் கலாச்சாரம் சார்ந்த மக்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தி, நமது உறவுகள் மற்றும் சமூகங்களில் அளவிடமுடியாத சேதத்தை ஏற்படுத்துகிறது.

மொத்தக் கொலைகளிலும் ஏறக்குறைய 40 விழுக்காட்டுக்கான காரணி வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையாகும். நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை நமது சமூகங்களில் உள்ள வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையைக் குறைக்க வேண்டுமென உறுதி கொண்டுள்ளது. ஆனால் எங்களுக்கு உங்கள் உதவி தேவை.

இந்த வகையான குற்றத்திலிருந்து நம் குடும்பத்தினரையும், நண்பர்களையும் பாதுகாத்துக்கொள்ள உதவும் வகையில் நாம் அனைவரும் பின்பற்றக்கூடிய சில எளிய உதவிக் குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

## வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்

- உங்கள் பாதுகாப்பு பற்றி உங்களுக்குப் பயம் இருந்தாலோ அல்லது நீங்கள் தாக்கப்பட்டாலோ **எப்போதும்** மூன்று பூஜ்யத்தை 000 அழையுங்கள்
- வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையின் கடுமையைப் பற்றி நீங்கள் **கற்றுக்கொள்ளவும்**. காவல்துறை உங்களுக்கு எப்படி உதவ முடியும் என்பதைக் கண்டு கொள்ளவும். *www.police.nsw.gov.au/ (DFV-இன் நடைமுறைச் செயல்விதிகள்)*
- **எப்போதும்** வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையால் தற்போது பாதிக்கப்பட்டவராகவோ அல்லது ஏற்கனவே பாதிக்கப்பட்டவராகவோ இருந்தால் விழிப்புடன் இருக்கவும். பின்தொடர்தல் என்று கருதப்படும் நடத்தைகள் பற்றிய உங்கள் புரிதலை அதிகரிக்கவும். *www.police.nsw.gove.au/ (பின்தொடர்தல் என்றால் என்ன)*

## வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையிலிருந்து உங்கள் குடும்பத்தினரையும், நண்பர்களையும் பாதுகாக்கவும்

- எந்த வகையான வீட்டு வன்முறையைக் காண நேர்ந்தாலும், வெறும் வேடிக்கை பார்ப்பவராக மட்டும் இருக்க **வேண்டாம்**. உடனடியாக மூன்று பூஜ்யத்தை (000) அழையுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த யாராவது வீட்டு வன்முறையில் பாதிக்கப்பட்டவராக இருந்தால், அவர்களை உள்ளூர் காவல் நிலையத்திலுள்ள வீட்டு வன்முறை தொடர்பு அலுவலரைத் தொடர்பு கொள்ளச் சொல்லி **ஊக்குவிக்கவும்**.

## வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையிலிருந்து உங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாக்கவும்

- உங்கள் வன்முறை அல்லது முறைகேடான நடத்தைக்கு நீங்கள் **பொறுப்பேற்றுக் கொள்ளவும்**. தகவல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு ஆண்கள் பரிந்துரை சேவையை 1300 766 491 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்
- ஒரு காலத்தில் உறவு வைத்திருந்த ஒருவரிடம் தொடர்ந்து தொடர்புகொள்ளவோ, தொந்திரவு செய்யவோ **வேண்டாம்**. இது பின்தொடர்தலாகும். மேலும் இது குற்றமாகும்.
- நீங்கள் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் வீட்டு வன்முறை இணைப்பை 1800 65 64 63 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு கூடுதல் உதவி **பெறவும்**.

***வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறை பற்றிய மேலதிக விவரங்களுக்குத் தயவுசெய்து www.police.nsw.gov.au/Domestic and Family Violence என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.***

***மேலும் குற்றத் தடுப்புத் தகவல்களுக்குத் தயவுசெய்து எங்களது www.police.nsw.gov.au என்ற இணையதளத்துக்குச் சென்று, குற்றத் தடுப்பு இணைப்பைத் தேர்ந்தெடுக்கவும்.***

NSW Police Force